Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

தமிழ் Mirror

WEDNESDAY, JULY 03, 2024

புதன்கிழமை ஜுலை 03, 2024 | ஒளி: 09 கதிர் 286 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE



# மடு அன்னையின் ஆடித் திருவிழா...

எஸ்.ஆர்.லெம்பேட்

மருதமடு அன்னைக்கு முடி சூட்டிய நூற்றாண்டு விழாவும் ஆடித் திருவிழா திருப்பலியும் செவ்வாய்க்கிழமை(2) மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப் பலியாக காலை 6.15 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டது.

(மேலதிக படங்கள் 3ஆம் பக்கத்தில்)



"யார் ஆட்சிக்கு வந்தாலும்

# பின்னோக்கிச் செல்லமுடியாது"

கடனைத் திருப்பிச் செலுத்த 2028 வரை சலுகைக் காலம்

வட்டி விகிதங்கள் கணிசமான அளவில் குறைப்பு

அதிகாரத்திற்கு வருவதற்காக வெவ்வேறு கதைகளைக் கூறுகின்றனர்

நிறைவுசெய்யும் காலம் 08 ஆண்டுகள் நீடிப்பு

ஒன்றுபட்டு தாய்நாட்டை மீண்டும் முன்னேற்றுவோம்

வரிசை முடிந்துவிட்டன என்பது மகிழ்ச்சியான செய்தி அல்லவா? இலங்கை முன்னணியில் உள்ளது.

கடன் மறுசீரமைப்பு மற்றும் அது தொடர்புடைய விடயங்கள் குறித்து சிலர் உண்மைக்குப் புறம்பான பிரசாரம் செய்கின்றனர் என்று குற்றஞ்சாட்டிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இந்த வேலைத்திட்டத்தில் நாம்

தொடர்ச்சி P12



# கண்டியில் குண்டு புரளி; வட்டவளை நபர் கைது

கண்டி நீதிமன்ற வளாகத்துக்குள் வெடிகுண்டு இருப்பதாக அநாமதேய தொலைபேசி அழைப்பை விடுத்த வட்டவளை பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P12



# சம்பந்தன் ஐயாவுக்கு சபையில் அனுதாபம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மறைந்த இரா.சம்பந்தனுக்கு, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஆகியோர் சபையில் தங்களுடைய அனுதாபங்களை, செவ்வாய்க்கிழமை (02) தெரிவித்துக்கொண்டனர்.

**ஜனாதிபதி ரணில்**

சண்டையின்றி அதிகாரத்தைப் பகிர்வதற்காக இரா. சம்பந்தன் நீண்ட தூரம் பயணித்தார்.அதனை அடைய இன்னும் குறுகிய தூரமே இருந்தது. அந்த குறுகிய தூரத்தை நாம் அடைவோம் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P12



# சம்பந்தன் ஐயாவுக்கு மஹிந்த அஞ்சலி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம்பந்தனின் பூதவுடல், மக்கள் அஞ்சலிக்காக பொரளை ஏ.எப்.ரேமன்ட் மலர்ச்சாலையில் செவ்வாய்க்கிழமை (02) வைக்கப்பட்டிருந்தது. அங்கு அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட பலரும் சென்று தங்களுடைய அஞ்சலியைச் செலுத்தினர். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சம்பந்தனின் பூதவுடலுக்குத் தனது இறுதி மரியாதையைச் செலுத்தியுள்ளார்.

# "சேறுபூசி திசைகாட்டியை எதிரிகளால் வீழ்த்த முடியாது"

திசைகாட்டி மீது பாறைகளையோ அல்லது மண்ணையோ வீசி எதிரிகளால் வீழ்ந்துவிட முடியாது என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவமானப்படுத்துவதன் ஊடாக மக்கள் கூட்டத்தைத் தடுத்து நிறுத்த முடியாது என்பது உறுதியாகியுள்ளது என்றார்.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத் தொடரின் முதலாவது கூட்டம் களுத்துறை மாவட்டத்தில் நடைபெற்றது.


தொடர்ச்சி P12



# "சம்பந்தனுக்காக அல்ல மோசடிக்காக ஒத்திவைப்பு"

பாராளுமன்றத்தின் புதன்கிழமை(03) அமர்வு இரா.சம்பந்தனுக்காக ஒத்திவைக்கப்படவில்லை. கடன் மறு சீரமைப்பு தொடர்பான 3 உடன்படிக்கைகளில் இரண்டில் மாத்திரமே கைச்சாத்திடப்பட்டுள்ளன. மேலும் ஒரு உடன்படிக்கை கைச்சாத்திடப்படாத நிலையிலேயே அது பாராளுமன்றத்தின் நிகழ்ச்சி நிழலுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது .இது பெரும் மோசடி. இது வெளிப்பட்டுள்ளதாலேயே அமர்வை ஒத்திவைத்துள்ளனரென எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P12



# முரல் தாக்கி இளைஞன் பலி

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் மீன் பிடியில் ஈடுபட்டிருந்த குருநகர் பகுதியைச் சேர்ந்த 29 வயதான மைக்கல் டினோஜன் என்ற இளைஞன் முரல் மீன் தாக்கி உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P12



# பாராளுமன்றில் இன்று அஞ்சலி

மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனின் பூதவுடலுக்குப் பாராளுமன்றத்தில் புதன்கிழமை(03) இறுதி அஞ்சலி செலுத்தப்படவிருப்பதால், அதில் கலந்துகொள்ளுமாறு பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர சகல பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P12



# காஸ் விலை குறைப்பு

சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை செவ்வாய்க்கிழமை(02) நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளது என லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்படி, 12.5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டர் 100 ரூபாவினால் குறைக்கப்படவுள்ளது. அதன் புதிய விலை 3,690 ரூபாவாகும்.

5 கிலோ கிராம் எடையுள்ள எரிவாயு சிலிண்டரின் விலை 40 ரூபாவால் குறைக்கப்படவுள்ளதுடன், அதன் புதிய விலை 1,482 ரூபாவாகும்.

தொடர்ச்சி P12

# தேசிய அரசாங்கத்தை புறக்கணிக்க முடிவு



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கு முயற்சிக்கும் நிலையில், அதற்கு ஆதரவளிக்காதிருக்க எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு தீர்மானித்துள்ளது.

பாராளுமன்ற வளாகத்தில் சஜித் பிரேமதாச தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற குழு உறுப்பினர்கள் குழு செவ்வாய்க்கிழமை(02) கூடியபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# "3 மாதங்களில் தீர்த்து வைக்கவும்"



சம்பந்தனின் ஆயுட் காலத்திலேயே தமிழ்த் தேசியப் பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்று இங்கு ஜனாதிபதி கூறினார். ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவதற்கு இன்னும் 3 மாதங்கள் உள்ள நிலையில், அதாவது இந்த வருடம் ஒக்டோபர் முடிவதற்கு முன்னர் இந்தப் பிரச்சினையை ஜனாதிபதி தீர்த்து வைக்க வேண்டும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட எம்.பியான எம்.ஏ.சுமந்திரன் வேண்டுகோள் விடுத்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (02) பெருந்தலைவர் சம்பந்தனின் மறைவு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

தொடர்ச்சி P12

PAGE 1 தொடர்ச்சிகள்



# "பின்னோக்கிச் செல்லமுடியாது"

முன்னோக்கிச் செல்ல வேண்டும். யார் ஆட்சிக்கு வந்தாலும் பின்னோக்கிச் செல்லமுடியாது.

நாட்டிற்குச் சரியான கொள்கையுடன் அரசாங்கம் முன்னோக்கிச் செல்லும் போது விமர்சனம் செய்வோர் அதிகாரத்திற்காக நாளாந்தம் வெவ்வேறு கதைகளை உருவாக்கி வருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கடன் மறுசீரமைப்பு செயற்பாட்டில் வெற்றிபெற்ற நடுத்தர வருமானம் பெறும் நாடுகளில் இலங்கை முன்னணியில் இருப்பதாகவும், இது நாட்டுக்குக் கிடைத்த தனித்துவமான வெற்றி என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (02) கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட உரையொன்றை நிகழ்த்தினார். அந்த உரையின் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

முழுச் செய்தி P6

# கண்டியில் குண்டு புரளி; வட்டவளை நபர் கைது



வெடிகுண்டு மிரட்டல் காரணமாக செவ்வாய்க்கிழமை (02) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்த அனைத்து வழக்குகளும் ஜூலை 16ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கண்டி நீதிமன்ற வளாகத்தில் வெடிகுண்டு இருப்பதாக செவ்வாய்க்கிழமை (02) காலை 10 மணியளவில் பொலிஸ் அவசர பிரிவுக்கு (119) தொலைபேசி அழைப்பு வந்ததையடுத்து பொலிஸார் உடனடியாக நடவடிக்கையில் இறங்கினர். இராணுவ வெடிகுண்டு செயலிழப்பு பிரிவினரும் விசேட அதிரடிப்படையினரும் ஈடுபட்டனர். ஸ்தலத்துக்கு விரைந்த வெடிகுண்டு செயலிழப்பு பிரிவு நீதிமன்ற வளாகத்திலிருந்த அனைவரையும் வெளியேற்றித் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் வெடிகுண்டு கண்டுபிடிக்கப்படவில்லை.



# சம்பந்தன் ஐயாவுக்கு சபையில் அனுதாபம்

பாராளுமன்றத்தில் எங்களோடு பணியாற்றிய சக நண்பர், இரா.சம்பந்தன் காலமாகிவிட்டார். இக்கட்டான நிலையில் நாங்கள் ஒன்றாக பணியாற்றியுள்ளோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் முக்கிய உறுப்பினராக இருந்தவர் என்பதுடன், இந்த நாட்டின் இறையாண்மைக்காகப் பாடுபட்டவர்.

இந்த நாட்டை நான் பிரிப்பேன் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? என்று அவர் என்னிடம் கேட்டார். சம்பந்தன் அரசியலுக்கு வந்த போது நான் சிறிய பையனாக இருந்தேன். இங்குள்ளவர்கள் பலர் பிறந்துகூட இருக்க மாட்டீர்கள்.

அதிகாரம் எவ்வாறு பகிரப்பட வேண்டும். நாம் அதற்காகச் சண்டையிடக் கூடாது என்ற கருத்தை அவர் கொண்டிருந்தார். அதற்காக அதிகளவில் பாடுபட்டார். குறுக்கிய தூரமே இருந்தது. தற்போது அவர் இல்லாது விட்டாலும் தூரத்தை நாம் அடைவோம் என்றார்.

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தனின் இழப்பு தேசிய நல்லிணக்கத்திற்கான இழப்பாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய நாட்டின் ஒருமைப்பாட்டுக்காகவும் இறைமைக்காகவும் முன்னின்ற சம்பந்தனின் மறைவுக்கு எங்களின் இதயப்பூர்வமான ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவர் ஒற்றுமை, ஐக்கியம், பிராந்திய ஒற்றுமை மற்றும், தேசிய நல்லிணக்கத்திற்காகப் பாடுபட்டவராவார்.

இவரின் இழப்பானது தேசிய நல்லிணக்கத்திற்கு ஏற்பட்ட இழப்பாகும். அவர் எப்போதும் முற்போக்கான தலைவராக இருந்தவர் என்பதுடன், இலங்கையர் என்பதனை பற்றிப்பிடித்திருந்தார். இனம், மதம் ஆகியவற்றைப் பற்றிப்பிடித்தவராக இருக்கவில்லை. அவரின் இழப்பினையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைக் கூறுவதுடன், நாம் அனைவரும் அவரின் சேவையை நினைவு கூருவோம் என்றார்.

# பாராளுமன்றில் இன்று அஞ்சலி

இரா.சம்பந்தன் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக இன்று புதன்கிழமை பி.ப 2 மணி முதல் மாலை 4 மணிவரை பாராளுமன்ற கட்டடத்தின் முன்பக்கத்திலுள்ள ஒன்றுகூடல் மண்டபத்தில் வைக்கப்படும்.

# "சேறுபூசி திசைகாட்டியை எதிரிகளால் வீழ்த்த முடியாது"



அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அனுரகுமார திஸாநாயக்க,

21ஆம் நூற்றாண்டிற்கு, எமது நாடு ஒரு புதிய மறுமலர்ச்சி யுகத்தை நோக்கிப் பாய்ச்ச வேண்டும், எனவே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் அல்லது தேர்தலில் வெற்றி பெறுவது மாத்திரமல்ல, இதனைக் கருத்திற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன். நாட்டில் புதிய பாய்ச்சலுக்கு அனைத்து சக்திகளும் ஒன்று சேரும் வாய்ப்பு கிட்டியுள்ளது என்றார்.

மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படும் வரை சலுகைகள் வழங்கப்படும் எனத் தெரிவித்த அவர், மக்கள் காலூன்றி நிற்கும் வகையில் நாட்டில் உற்பத்திப் பொருளாதார நிலைமை உருவாக்கப்படும் என்றார்.

# "3 மாதங்களில் தீர்த்து வைக்கவும்"

எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர் அனுதாபம் தெரிவித்து உரையாற்றிய பின்னரே இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். மேலும் சுமந்திரன் எம்.பி. பேசுகையில்,

சம்பந்தனின் மறைவு தொடர்பாக அனுதாபம் வெளியிட்டமைக்கு ஜனாதிபதி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஜனாதிபதி தனது உரையின் போது தானும், சம்பந்தனும் ஒன்றாகப் பாராளுமன்றம் நுழைந்தமை தொடர்பில் குறிப்பிட்டதுடன், சம்பந்தனின் ஆயுட் காலத்திலேயே தமிழ்த் தேசியப் பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், துரதிர்ஷ்டவசமாக அவர் மறைந்துவிட்டார் எனவும் கூறினார்.

இந்நிலையில், நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறுவது என்னவென்றால் தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவதற்கு முன்னர் அதாவது இந்த வருடம் ஒக்டோபர் முடிவதற்கு முன்னர் இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று வினயமாகக் கேட்கின்றேன். நாட்டு மக்கள் அனைவரும் திருப்தியடையும் வகையில் இந்தப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்றார்.

# "சம்பந்தனுக்காக அல்ல, மோசடிக்காக ஒத்திவைப்பு"

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (02) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விசேட கூற்றொன்றை முன்வைத்துப் பேசுகையில்,

கடன் மறு சீரமைப்பு தொடர்பான இணக்கப்பாடு குறித்து பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை மற்றும் புதன்கிழமை ஆகிய இரு நாட்களும் விவாதம் நடத்துவதெனக் கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதியின் உரை மட்டுமே இடம்பெறுமெனவும் புதன்கிழமை பாராளுமன்ற அமர்வு இடம்பெறாதெனவும் அதற்கு வேறு காரணமும் (சம்பந்தனின் மறைவு) கூறியுள்ளனர்.

உண்மை அதுவல்ல. கடன் மறு சீரமைப்பு தொடர்பான 3 உடன்படிக்கைகளில் இரண்டில் மாத்திரமே கைச்சாத்திடப்பட்டுள்ளது மேலும் ஒரு உடன்படிக்கை கைச்சாத்திடப்படாத நிலையிலேயே இவ்விடயம் பாராளு மன்றத்தின் நிகழ்ச்சி நிழலுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இது பெரும் மோசடி. இது வெளிப்பட்டுள்ளதாலேயே புதன்கிழமை அமர்வை ஒத்திவைத்துள்ளனர் என்றார்.

இதற்கு சபை முதல்வரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த பதிலளிக்கையில்,


கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இரண்டு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப் பட்டுள்ள நிலையில், மேலும் ஒரு உடன்படிக்கை தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகின்றது.

நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பது தொடர்பிலும் கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கை தொடர்பாகவும் ஜனாதிபதி தனது விசேட உரையில் சபையில் தெளிவுபடுத்தினார். அது தொடர்பில் மீண்டும் இந்த சபைக்கு அறிவிக்க வேண்டிய அவசியம் கிடையாது என்றார்.

> **கடன் மறுசீரமைப்பு தொடர்பான 3 உடன் படிக்கைகளில் இரண்டில் மாத்திரமே கைச்சாத்திடப்பட்டுள்ளது மேலும் ஒரு உடன்படிக்கை கைச்சாத்திடப்படாத நிலையிலேயே இவ்விடயம் பாராளுமன்றத்தின் நிகழ்ச்சி நிழலுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இது பெரும் மோசடி. இது வெளிப்பட்டுள்ளதாலேயே புதன்கிழமை அமர்வை ஒத்திவைத்துள்ளனர்**



# முரல் தாக்கி இளைஞன் பலி



பண்ணை கடலில் திங்கட்கிழமை (01) இரவு மீன் பிடியில் ஈடுபட்டிருந்த வேளை முரல் மீன் இளைஞனின் கழுத்து பகுதியில் தாக்கியதில் இளைஞன் உயிரிழந்துள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது

இளைஞனின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதான வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# காஸ் விலை குறைப்பு




2.3 கிலோ கிராம் எடையுள்ள எரிவாயு சிலிண்டரின் விலை 18 ரூபாவால் குறைக்கப்படவுள்ளதுடன், அதன் புதிய விலை 694 ரூபாவாகும்.

# கொரிய யுவதியிடம் சேஷ்டை புரிந்தவர் கைது

ஆ.ரமேஸ்

கொரியா நாட்டிலிருந்து இலங்கைக்குச் சுற்றுலாப் பயணத்தை மேற்கொண்டு நுவரெலியாவுக்கு சென்ற இளம் யுவதியிடம் தகாத வகையில் சேஷ்டை செய்த இயந்திர படகு ஓட்டுநர் ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறு நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றம் திங்கட்கிழமை (01) உத்தரவு பிறப்பித்துள்ளது.

குறித்த யுவதி கிறேகறி தெப்பக்குள பகுதிக்கு (30) மாலை அழகை ரசிக்க சென்று அங்குக் குளத்தில் இயந்திர படகில் சவாரி செய்ய முற்பட்டுள்ளார்.

இந்த சமயத்தில் குளத்தில் படகு சேவையில் ஈட்டுப்பட்டிருந்த இளைஞர் குறித்த யுவதியிடம் சேஷ்டையில் ஈடுபட்டுள்ளார்.

இதனையடுத்து,

யுவதி நுவரெலியா பொலிஸ் நிலையத்திற்குச் சென்று

தனக்கு நேர்ந்தது தொடர்பில் முறையிட்டதையடுத்து, சுற்றுலாத்துறையைப் பொறுப்பான பொலிஸ் பிரிவினர் கிறேகறி குளத்திற்குச் சென்று சேட்டையில் ஈடுபட்ட இளைஞரைக் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இளைஞரை விசாரணைக்காக நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோது, விசாரித்த நீதவான் பிரபுதிகா நாணயக்கார, சந்தேக நபரை எதிர்வரும் திங்கட்கிழமை (15) விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பித்துள்ளார்.

# தேசிய அரசாங்கத்தை புறக்கணிக்க முடிவு

தேசிய அரசாங்கத்தை அமைக்கும் திட்டத்திற்கு ஆதரவளிக்கக் கூடாது என்ற நிலைப்பாட்டில் அனைவரும் இருக்க வேண்டும் என்ற யோசனை பாராளுமன்ற உறுப்பினர் புத்திக முன்வைக்கப்பட்டுள்ளது. அதற்குக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த அனைவரும் இணக்கம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில் எடுத்துள்ள தீர்மானத்தை மீறாமல், அனைவரும் ஒரே கொள்கையில் பயணிக்க வேண்டும் என்றும், சஜித் பிரேமதாசவை பலப்படுத்தி கட்சியை முன்னால் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இதன்போது தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# “நாட்டுக்கு எது நற்செய்தி? எது துக்கச் செய்தி?”



நாட்டுக்கு எது நற்செய்தி? எது துக்கச் செய்தி? என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையே பாராளுமன்றத்தில் கேள்விக்கணைகள் தொடுக்கப்பட்டன.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (02) விசேட உரையாற்றும் போது நற்செய்திகளாக கருதப்படும் விடயங்கள் தொடர்பில் குறிப்பிட்டிருந்த நிலையில், அது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விமர்சனங்களை முன்வைத்து கருத்து வெளியிட்ட போதே இருவருக்கும் இடையே கேள்விக்கணைகள் தொடுக்கப்பட்டன.

எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றும் போது குறிப்பிடுகையில்,

ஜனாதிபதி நற்செய்திகள் என சில விடயங்களை குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், அவரிடம் சில கேள்விகளைக் கேட்கின்றேன். நாட்டில் போசனைக் குறைபாடு அதிகரித்துள்ளமை நற்செய்தியா? துக்கச் செய்தியா? நாட்டின் கல்விமான்கள் நாட்டை விட்டுச் செல்வது நற்செய்தியா? துக்கச் செய்தியா? வறுமை நிலை அதிகரிப்பு நற்செய்தியா? துக்கச் செய்தியா? தொழிற்சாலைகள் மூடப்பட்டு, தொழில் முயற்சியாளர்கள் வியாபாரத்திலிருந்து விலகுவது நற்செய்தியா? துக்கச் செய்தியா? பாடசாலைகளில் பிள்ளைகள் மயங்கி விழுவது நற்செய்தியா? துக்கச் செய்தியா? கட்டிட நிர்மாண தொழில்துறை வீழ்ச்சியடைந்துள்ளமை நற்செய்தியா? துக்கச் செய்தியா? மூன்று வேளை சாப்பிட்டவர்கள் இப்போது ஒருவேளை உணவை மட்டும் உண்பது நற்செய்தியா? துக்கச் செய்தியா? என கேட்கின்றேன் என்றார்.

இது தொடர்பில் பதிலளித்த ஜனாதிபதி கூறுகையில்,

எதிர்க்கட்சித் தலைவர் சில கேள்விகளைக் கேட்டார். மந்தப் போசனையால் மாணவர்கள் வகுப்புகளில் மயங்கி விழுவது நற்செய்தியா? துக்கச் செய்தியா? என்று கேட்டார். அது துன்பச் செய்திதான் அதனால்தான் அஸ்வெசும கொடுப்பனவு, அரிசி கொடுப்பனவு, மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டங்களை முன்னெடுக்கின்றோம்.

அத்துடன், வறுமை நிலை அதிகரித்துள்ளதாகக் கூறினார். அது துக்கச் செய்திதான். அதனாலேயே ஒரு இலட்சம் பேருக்கு உறுமய வேலைத்திட்டத்தை முன்னெடுக்கின்றோம். வீடுகளை வழங்குகின்றோம். வேலையில்லா பிரச்சினை துக்கச் செய்தி என்பதனாலேயே இங்கே தொழிற்சாலைகள் அமைக்கப்படுகின்றன.

முதலீடுகள் கொண்டுவரப்படுகின்றன. இந்த நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருக்கையில் மக்கள் நெருக்கடியில் இருக்கையில் பிரதமர் பதவியைப் பெற்றுக்கொள்ளுமாறு கோரும் போது அதனைப் பொறுப்பேற்காது ஓடியமை நற்செய்தியா? துக்கச் செய்தியா? என்று கேட்டுள்ளார்.




## போதைபொருளுடன் சிறைச்சாலை உத்தியோகத்தர் கைது

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு சிறைச்சாலையில் 8 கிராம் ஐஸ்போதை பொருளுடன் சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவர் திங்கட்கிழமை(01) இரவு கைது செய்துள்ளதாக மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறைச்சாலையில் இரவு கடமையிலிருந்த சிறைச்சாலை உத்தியோகத்தரை, ஜெயிலர் சோதனையிட்ட போது, அவரிடமிருந்து 8 கிராம் ஐஸ் போதைப்பொருளை மீட்டதுடன், அவரை கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவர் அனுராதபுரத்தைச் சேர்ந்த 45 வயதுடையவர் எனவும் அவரை நீதிமன்றத்தில் முன்னிறுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அதிகாரிகளை பூட்டி, அச்சுறுத்திய நபர்



யாழ்ப்பாணம்-இராமநாதன் வீதியில், கலட்டிச் சந்தியிலுள்ள மருந்தகமொன்றை திங்கட்கிழமை(01) சோதனையிடச் சென்ற அரச உத்தியோகத்தர்கள் இருவரைப் பூட்டி வைத்த கடை உரிமையாளர் கைது செய்துள்ளனர்.

சுகாதார அமைச்சகத்தின் உணவு கட்டுப்பாடு நிர்வாக பிரிவு உத்தியோகத்தர்கள் இருவர், குறித்த மருந்தகத்தின் அனுமதி தொடர்பாக சோதனையிடச் சென்று சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் போது, கடை உரிமையாளர், அவர்களை மருந்தகத்திற்குள் பூட்டி வைத்து அச்சுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் யாழ். மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு அரச அதிகாரிகளால் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ். மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார், அனுமதியின்றி மருந்து விற்பனையில் ஈடுபட்டமை மற்றும் அரச உத்தியோகத்தர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் கீழ் கடை உரிமையாளரைக் கைது செய்துள்ளனர்.

கைதானவரை யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளனர்.

## தயாசிறியை வெளியேற்ற இடைக்கால தடையுத்தரவு



ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் நாயகம் பதவியிலிருந்து, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அல்லது கட்சி அங்கத்துவத்திலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவை வெளியேற்றுவதற்கு தடை விதித்து கொழும்பு மாவட்ட நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை (02) இடைக்காலத் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராகவே இந்த இடைக் காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் அதே கட்சியின் பிரதிச் செயலாளர் சரத் ஏக்கநாயக்க ஆகியோரை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தாக்கல் செய்த வழக்கை பரிசீலித்த கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி அனுர விக்ரமசிங்க இந்த தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

“வழக்கு விசாரணை செய்யப்பட்டு இறுதி தீர்மானம் வழங்கப்படும் வரை இந்த தடை உத்தரவு அமுலில் இருக்கும் எனவும் இந்த உத்தரவின்படி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளராகச் செயற்படுவதற்கு எவ்வித தடையும் இல்லை” என்றும் ஜயசேகர தெரிவித்துள்ளார்.

## யாழ்ப்பாணத்தில் கவனயீர்ப்பு போராட்டம்





■ நிதர்ஷன் வினோத்

யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரின் மத வெறிச் செயற்பட்டைக் கண்டித்தும் அவரைப் பதவி நீக்க வலியுறுத்தியும் யாழில் கவனயீர்ப்பு போராட்டமொன்று செவ்வாய்க்கிழமை (02) முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டம் இலங்கை சிவசேனை மற்றும் உருத்திரசேனை ஆகிய இரண்டு இந்து அமைப்புக்கள் இணைந்து யாழிலுள்ள வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

இரா.சம்பந்தன் மறைவினால்

## “பாராளுமன்ற உறுப்புரிமையில் வெற்றிடம்”

திருகோணமலை தேர்தல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராஜவரோதயம் சம்பந்தனின் மறைவினால் அரசியலமைப்பின் 66 (அ) உறுப்புரையின் பிரகாரம் 2024 ஜூன் 30ஆம் திகதியிலிருந்து பாராளுமன்றத்தின் உறுப்புரிமையில் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

சம்பந்தனின் மறைவினை இப்பாராளுமன்றத்திற்குத் தான் மிகவும் கவலையுடன் அறிவிப்பதாகவும், அவரின் குடும்பத்தினருக்கு பாராளுமன்றம் சார்பில் தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான அனுதாபப் பிரேரணை பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக அன்னாரது பூதவுடல் 3ஆம் திகதி, அதாவது நாளை (இன்று )பாராளுமன்றப் பிரதான நுழைவாயிலுக்கு அருகிலுள்ள வைபவ மண்டபத்தில் பிற்பகல் 2 மணி முதல் மாலை 4 மணி வரையில் வைக்கப்படுமென்பதை அனைத்து கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவிக்கின்றேன் எனவும் தெரிவித்துள்ளார்.

## 3 மாதங்களுக்கு விடுமுறை




தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட எம்.பியுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு பாராளுமன்றத்தினால் 3 மாதங்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றம் செவ்வாய்க்கிழமை (02) காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபே வர்தன தலைமையில் கூடியது. இதனையடுத்து சபாநாயகர் அறிவிப்பு, ஜனாதிபதி உரை, எதிர்கட்சித் தலைவரின் கருத்தையடுத்து எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்லவினால் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கான விடுமுறை முன்மொழியப்பட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட எம்.பியுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு செவ்வாய்க்கிழமை 2ஆம் திகதியிலிருந்து 3 மாத காலங்களுக்கு விடுமுறையளிக்குமாறு வேண்டுகின்றேன் என லக்ஷ்மன் கிரியெல்லவினால் விடுமுறை முன்மொழியப்பட்டது. இதனைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் எம்.பியான செல்வராசா கஜேந்திரன் வழிமொழிந்தார்.

இதனையடுத்து, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட எம்.பியுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு பாராளுமன்றத்தினால் 3 மாதங்களுக்கு விடுமுறை வழங்க சபை இணக்கம் வெளியிட்டது.







## மடு அன்னையின் ஆடி மாதத் திருவிழா

■ எஸ்.ஆர்.லெம்பேட்

மருதமடு அன்னைக்கு முடி சூட்டிய நூற்றாண்டு விழாவும் ஆடித் திருவிழா திருப்பலியும் செவ்வாய்க்கிழமை (02) காலை 6.15 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப் பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

செவ்வாய்க்கிழமை (02) காலை 6.15 மணி அளவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில், கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் குருநாகல் மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஹரோல்ட் அந்தோனி பெரேரா ஆகியோர் இணைந்து கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.











# பிரித்தாளும் தலைமைகளுக்கு தலைசாய்க்காத தலைமை அவசியம்

நமது நாட்டை பொறுத்தவரையில், பெரும்பான்மை இனக் கட்சிகளாக இருந்தாலென்ன, சிறுபான்மை இனக் கட்சிகளாக இருந்தாலென்ன அனைத்து கட்சிகளும் தங்களுடைய தாய் கட்சியிலிருந்து பிரிந்தே நிற்கின்றன. அதற்கு, அந்தந்த கட்சிகளைச் சேர்ந்த ஒருசிலரைத் தவிர, ஏனையோர் பிரிந்து நிற்கின்றனர் அல்லது பிரிக்கப்பட்டுவிட்டனர்.

பிரதான கட்சிகள் தங்களுடைய ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்காக, அல்லது தசாப்தகால ஆட்சியை நோக்கிய பயணத்துக்காகக் கையாண்ட பிரித்தாளும் கொள்கைக்குள் சிக்கிக்கொண்டு பிரிந்தவர்கள் அல்லது பிரிக்கப்பட்டவர்களில் ஒருசிலர் மட்டுமே பிரதான கட்சிகளுடன் சங்கமித்து விட்டனர். ஏனையோர், தங்களுடைய தலைமையின் கீழ் புதுப்புது கட்சிகளை உருவாக்கிவிட்டனர்.

இதில், தானும் ஒரு கட்சியின் தலைவர் என்பதை ஊருக்குக் காட்டிக்கொள்வதற்காக புதிய கட்சிகளை உருவாக்கி விட்டனர். எவரொருவரும் கட்சியை உருவாக்க முடியும். அது ஜனநாயகமாகும். எனினும், பிரிந்து சென்றவர்கள் எல்லோரும் கட்சிகளை ஆரம்பித்திருப்பதால், கட்சிகளின் அங்கத்தவர்களும் பிரிந்து நிற்கவேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டு விட்டனர்.

தென்னிலங்கை சிங்கள கட்சிகளும், வடக்கு, கிழக்கு மற்றும் கொழும்பை மையமாகக் கொண்ட தமிழ், முஸ்லிம் கட்சிகளும், மலையகத்தைச் சேர்ந்த தமிழ்க் கட்சிகளும் பிரிக்கப்பட்டுவிட்டன. அவ்வாறு பிரிந்து சென்று அரசாங்கங்களுக்கு முட்டுக்கொடுத்தவர்கள், ஒருசில காலம் அமைச்சர், அரையமைச்சர், இராஜாங்க அமைச்சர் பதவிகளை வகித்துவிட்டு, தனிக்கட்சியை உருவாக்கி தலைமை வகிக்கின்றனர்.

பிரிக்கவே முடியாதெனக் கூறப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பிரிக்கப்பட்டது. எனினும், மறைந்த தலைவர் இரா.சம்பந்தன், கூட்டமைப்பை ஒரு குடையின் கீழே வழிநடத்திச் சென்றார். அதன்பின்னர், புதிய தலைமைக்கான தேர்தல் நடத்தப்பட்டு, கூட்டமைப்புக்கு புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். நிர்வாகக் குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

அவ்விரு தெரிவுகளும் யாப்புக்கு முரணானது என்றும், தேர்தல் நடத்தப்பட்டமையும் சட்டவிரோதமானது எனக்கூறி, நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமையால், புதிய நிர்வாகத்தினால் செயற்பட முடியாதுள்ளது.

எனினும், நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை வாபஸ் பெற்றுக்கொண்டு செயற்படுவதற்கு அண்மையில் இணக்கப்பாடு எட்டப்பட்டது. அதற்கான முன்னகர்வுகளை அவதானிக்க முடியவில்லை. வழக்கை வாபஸ்பெற்று, தமிழ்த் தேசியக் கூட்டப்பை அதன் பாதையில் பயணிக்க விடுவதே காலத்தின் தேவையாகும்.

இல்லையேல், ஆளுக்கு ஒருபக்கம் பிரிந்திருப்பது பிரித்தாளும் தலைமைகளுக்கு தாங்களாகவே வழங்கும் வாய்ப்பாகும். அதேபோல, புதிய தலைமையும் பிரித்தாளும் தலைமைக்குத் தலைசாய்க்காதவராய் இருத்தல் அவசியமாகும். இல்லையேல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதன் நோக்கம் பிழைத்துவிடும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதன் நோகத்தின் பால் அக்கறையுடன் இருப்பார்கள் எனில், கூட்டமைப்புக்கு எவ்விதமான தீங்கும் ஏற்படாத வகையில், அதன் கொள்கையில் பயணித்து, நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக, கூட்டமைப்பில் ஓரணியில் கைகோர்த்து இருப்பதே தமிழினத்தின் பெருந்தலைவர் மறைந்த ஐயா, இரா. சம்பந்தனுக்கு செய்யும் மரியாதையாகும் என்பதை நினைவூட்டுகின்றோம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






# இரா.சம்பந்தன் மிதவாத அரசியலின் அடையாளம்

எம்.எஸ்.எம்.ஐயூப்

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் மறைவின் மூலம் தமிழ் அரசியலில் தீவிரவாதத்துக்கும் மதவாதத்துக்கும் இடையே சமநிலையை ஏற்படுத்துவதற்காகக் கடுமையாகப் போராடிய தமிழ் அரசியல்வாதிகளில் முதன்மையான ஒருவரைத் தமிழ்ச் சமூகம் இழந்தது.

முன்னாள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தமது முகநூல் பக்கத்தில் பகிர்ந்திருந்த ஒரு கருத்து அவரது இந்த போராட்டத்துக்கான வரவேற்பு என்றே கூற வேண்டும்.

“ஐக்கிய இலங்கைக்குள் அதிகபட்ச அதிகார பரவலாக்கலுக்காக முன்னின்ற உண்மையான ஓர் அரசியல்வாதியான சம்பந்தர் அவர்களைப் பற்றிய நினைவு வாழ்க!” என்று தேசப்பிரிய குறிப்பிட்டு இருந்தார். (தேசப்பிரிய சிங்களத்திலும் சம்பந்தன் என்றல்லாது சம்பந்தர் என்றே குறிப்பிட்டு இருந்தார்)

ஐக்கிய இலங்கைக்குள் அதிகபட்ச அதிகார பரவலாக்கல் என்பது சம்பந்தன் அடிக்கடி குறிப்பிடும் வாசகமாக இருந்தது. இனவாதிகள் அவரைப் பற்றி எதைக் கூறினாலும் படித்த சிங்களவர்கள் அவரை நம்பினார்கள் என்பதையே இது காட்டுகிறது.

காமிணி ஏக்கநாயக்க என்னும் மற்றொருவரது முகநூல் பக்கத்திலிருந்து எடுக்கப்பட்ட சில கருத்துக்களையும் மஹிந்த தேசப்பிரிய தமது முகநூல் பதிவுக்கான பின்னூட்டலொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

“இலங்கை பிரிந்து செல்லாது இருக்கக் காரணமான மற்றொரு மனிதர்... மிகவும் கடினமான கால கட்டமொன்றில் தமது வாழ்க்கையின் கூர்மையைப் பரீட்சித்துப் பார்க்க நேர்ந்த ஒரு மனிதர்... வாழும் போதே ஒரே நேரத்தில் கடவுளினதும் சாத்தானினதும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட ஒரு மனிதர்... அவருக்கு இப்போதாவது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக!” என்று காமிணி ஏக்கநாயக்க குறிப்பிட்டிருந்தார்.

1970இல் கொழும்பில் நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் பொதுக் கூட்டமொன்று தொடர்பான சுவரொட்டிகளை ஒட்டும் போது, திருகோணமலையில் அக்கட்சியின் சில உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டதாகவும் சம்பந்தன் சட்டத்தரணியாக அவர்களுக்காக இலவசமாக வாதாடி அவர்களை விடுவித்ததாகவும் மஹிந்த தேசப்பிரிய மற்றொரு பின்னூட்டலால் குறிப்பிட்டுள்ளார்.

அடக்குமுறைக்கு எதிரான போராட்டத்தின் போது சம்பந்தன் இனப் பாகுபாடு காட்டவில்லை என்பதைச் சுட்டிக் காட்டவே அவர் அதனை குறிப்பிட்டுள்ளார்.

தேசப்பிரியவின் பதிவுக்கான வேறு சில பின்னூட்டல்களில் தேசப்பிரியவும் ஏக்கநாயக்கவும் கடுமையாக விமர்சிக்கப்பட்டும் உள்ளனர். ஆயினும், சம்பந்தன் உள்ளிட்ட தமிழ் அரசியலின் மிதவாதிகள் சிங்கள மக்களில் ஒரு சாராரின் மனதை வென்றுள்ளனர் என்பதை மறுக்க முடியாது.

அது இலங்கையின் இன உறவின் சுபாவத்தோடு ஒப்பிடுகையில் மிகவும் கடினமான சாதனையாகும். இதேசப்பிரிய போன்றோரின் கூற்றுக்களைப் பார்த்து சிலவேளை இன்றும் நாட்டுப் பிரிவினையை ஆதரிப்போர் சம்பந்தனைக் குறைகூறவும் கூடும்.

சிலவேளை, பல்வேறு பட்டங்களையும் அவருக்குச் சூட்டலாம். ஆனால், ஒவ்வொரு பிரச்சினையையும் வரலாற்றுப் பின்னணியிலும் புவிசார் நிலைமைகளின் பின்னணியிலும் தான் பார்க்க வேண்டியுள்ளது.

ஒரு வகையில், சம்பந்தனின் வாழ்க்கையானது குறைந்தபட்சம் கடந்த நான்கு தசாப்தங்களாக தமிழ் அரசியல் எதிர்நோக்கியிருக்கும் சவால்களின் நடைமுறை சான்றாகும். அரச தலைவர்களின் இனவாத நடவடிக்கைகள் மற்றும் அடக்குமுறைகள், அவற்றில் சிக்குண்ட தமிழ் மக்களின் நீண்ட கால மோசமான அனுபவங்கள், தமிழ் தலைவர்களிடையிலான அரசியல் பொட்டா போட்டி, புவிசார் அரசியல் நெருக்குவாரங்களின் பிரகாரம் மாறுபடும் இந்திய நிலைப்பாடுகள் மற்றும் மாறுபடும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப அரசியல் தந்திரோபாயங்களை தெரிவு செய்வதன் கட்டாயம் ஆகியவற்றின் மத்தியில் ஒவ்வொரு தமிழ் கட்சியும் அரசியல்வாதியும் தமது அரசியல் இருப்பை பாதுகாத்துக்கொள்வதே பெரும் சவாலாக மாறியுள்ளது. அத்துடன், வரலாறு தம்மீது சுமத்தியுள்ள கடமைகளையும் அவர்கள் விளங்கிக்கொண்டு தான் இருந்திருப்பார்கள்.

1970 பொதுத் தேர்தலில் சிறிமாவோ பண்டாரநாயகக தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்றது. அதனால் தமிழ் அரசியல் கட்சிகள் தமது பேரம் பேசும் பலத்தை இழந்ததாகவும் அதன் காரணமாக அப்போதைய அரசாங்கத்தின் மீது நெருக்குதலை ஏற்படுத்தி தம்மீது அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்துக்கொள்ளவே தமிழ் தலைவர்கள் தனித் தமிழ் நாடு என்ற கோஷத்தை 1970களில் தேர்ந்தெடுத்தனர் என்றும் சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக இருந்த என்.சன்முகதாசன் ஒரு முறை எழுதியிருந்தார்.

காரணம் எதுவாக இருந்தாலும் இந்தியா விரும்பாத ஒரு முடிவுக்கு,அதாவது தனித் தமிழ் நாட்டை அடைவதற்கு 1976இல் அப்போதைய தமிழ் தலைவர்கள் முடிவு செய்தனர்.

அத்துடன், தமிழ் அரசியல் எதிர்நோக்கிய சவால்கள் பன்மடங்காக அதிகரித்தது. அது சம்பந்தனின் தலைமுறையினர் அரசியலில் முக்கிய பங்காற்றிய காலமாகும்.

மிக விரைவிலேயே தமிழ் ஈழ கோஷமும் போராட்டமும் அப்போதைய இளைஞர்களின் கைகளைச் சென்றடைந்தது. ஜனநாயக ரீதியிலும் சட்டப்பூர்வமாகவும் அவ்விலக்கை அடைய நினைத்தவர்கள் அவ்விளைஞர்களால் துரோகிகளாகப் பட்டம் சூட்டப்பட்டனர். அதற்காகத் தமிழ் ஈழ சுலோகத்தைக் கைவிடாமலும் தமது சாத்விக போக்கைக் கைவிடாமலும் அரசியலில் ஈடுபட சம்பந்தன் உள்ளட்ட அந்தத் தலைமுறையினர் நிர்ப்பந்திக்கப்பட்டனர். ஆயுதப் போராட்டமும் அடக்குமுறையும் ஒன்றையொன்று வளர்த்துக்கொண்டு பாரிய போர் வெடிக்கவே மிதவாத தலைவர்கள் கொழும்பில் தஞ்சம் புக நேர்ந்தது.

இந்த நிலையிலேயே 1987இல் இந்திய அரசாங்கம் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வொன்றை இலங்கை அரசாங்கத்தின் மீதும் தமிழ் மக்களின் மீதும் திணித்து அப் பிரச்சினை விடயத்தில் தமது நிலைப்பாட்டை எடுத்துக் காட்டியது.

பிராந்தியத்தின் தமது ஆதிக்கத்துக்கு அச்சுறுத்தலாகும் வகையிலான இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையை எதிர்க்கும் வகையில் இலங்கை தமிழ் ஆயுதக் குழுக்களுக்கு உதவு வழங்கினாலும் தனித் தமிழ் நாட்டுக்கு இடமளிப்பதில்லை என்பதே அந்த நிலைப்பாடாகும்.

1988 நடைபெற்ற தெற்காசியப் பிராந்திய ஒத்தழப்புக்கான மாநாட்டில் (SAARC) கலந்த கொள்ள பாகிஸ்தானில் இஸ்லாமாபாத் நகருக்குச் சென்றிருந்த அப்போதைய இந்திய வெளியுறவுச் செயலாளர் எஸ்.கே. சிங் அதனை மிகத் தெளிவாக எடுத்துரைத்தார்.

தமிழ் நாட்டுப் பிரிவினைவாதத்துக்கு உயிரூட்டக்கூடிய தமிழ் ஈழத்துக்கு இந்தியா ஒருபோதும் இடமளிப்பதில்லை என்று அவர் கூறினார். அதனை விளங்கிக்கொண்ட சம்பந்தன் உள்ளிட்ட அப்போதைய தமிழர் விடுதலை கூட்டணியினரும் புலிகளைத் தவிர்ந்த தமிழ் ஆயுதக் குழுக்களும் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா தந்த மாகாண சபைத் தீர்வை ஏற்றுக்கொண்டன. புலிகள் இந்த புவிசார் அரசியல் யதார்த்தத்தை புரிந்துகொள்ளவில்லை. அவர்கள் மிதவாதிகளை வேட்டையாடினர்.

சம்பந்தன் உள்ளிட்ட ஜனநாயக வழியைத் தேர்ந்தெடுத்த தமிழ் அரசியல்வாதிகள் மாறுபடும் சூழ்நிலைமைகளால் எவ்வளவு நெருக்குதலுக்கு உள்ளானார்கள் என்பதையே இது காட்டுகிறது. 2000ஆவது ஆண்டு நிலைமை மீண்டும் மாறி தமிழ் மிதவாத தலைவர்கள் மற்றொரு சவாலுக்கு முகங்கொடுக்க நேரிட்டது.

அவ்வாண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அழைப்பின் பேரில் இலங்கையில் சமாதானத்தைக் கொண்டுவர நோர்வே முன்வந்தது. அவ்வாண்டு ஒகஸ்ட் மாதம் சந்திரிகா முன்வைத்த இனப் பிரச்சினைக்கான தீரவுத் திட்டம் உள்ளிட்ட புதிய அரசியலமைப்பு நகலின் பிரதிகளைப் பாராளுமன்றத்திலேயே தீயிட்டு கொளுத்திய ஐக்கிய தேசிய கட்சியும் அதனை ஏற்றுக்கொண்டது.

அதே ஆண்டு ஏப்ரல் மாதம் 11,000 வீரர்களைக் கொண்ட ஆனையிரவு அரச படை முகாமை கைப்பற்றி பலமான நிலையிலிருந்த புலிகளும் அதனை ஏற்றுக் கொண்டனர்.

அதே ஆண்டு அது வரை முன்னாள் போராளிக் குழுக்கள் உள்ளிட்ட மிதவாத தமிழ் அரசியல்வாதிகளைத் துரோகிகள் என்று அழைத்த புலிகள் அவர்களுடன் கலந்துரையாட முன்வந்தனர். அதன் பிரகாரம் அத்தலைவர்களும் புலிகளைத் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதி என்று ஏற்றுக் கொண்டனர். அவர்கள் சூழ்நிலைமையின் கைதிகளானார்கள் என்றே கூற வேண்டும்.

இத்திடீர் மாற்றங்கள் அனைத்தும் ஒரே காலகட்டத்தில் எவ்வாறு இடம்பெற்றன என்பது தெளிவாக இல்லை. ஆனால், சந்திரிகாவின் சமாதான திட்டத்துக்கு ஆதரவு வழங்குமாறு தாம் ஐ.தே.கவிடம் கூறியதாக அப்போதைய தெற்காசியாவுக்கான அமெரிக்கத் துணைச் செயலாளர் கார்ல் இன்டர்பேர்த் (Karl Inderfurth) சில மாதங்களுக்குப் பின்னர் 2001இல் ஏப்ரல் மாதம் இந்து பத்திரிகைக்குத் தெரிவித்து இருந்தார். எனவே, எல்லோர் பின்னாலும் அமெரிக்கா இருந்திருக்கலாம். அதன் படியே 2002 சமாதான பேச்சுவார்த்தை ஆரம்பமாகியது.

அதன் மூலம் தமிழர் விடுதலை கூட்டணி பிளவுபட்டது. பிரதான தமிழ் கட்சியாக இலங்கை தமிழரசுக் கட்சி மேலெழுந்து வந்தது. சம்பந்தன் அதன் தலைவராக மேலே உயர்த்தப்பட்டார்.

போர் முடிவடைந்ததன் பின்னர் 2016இல் சம்பந்தன் உள்ளிட்ட தமிழரசுக் கட்சியினர் சமஷ்டி என்பதனை ஒருமித்த நாடு என்று பெயர் மாற்றம் செய்து தெற்கைக் குழப்பாது தீர்வைத் தேட முயன்றனர். ஆனால் அதனால் அவர் தமிழர்கள் மற்றும் சிங்களவர் ஆகிய இரு சாராராலும் தாக்கப்பட்டார். தீர்வு எவ்வளவு கடினமானது என்பதையும் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்பதையுமே அது காட்டுகிறது.



## வாழ்வியல் தரிசனம்

காரிருளில் ஒளி தேவைப்படுகிறது. கும்மிருட்டில் நடக்க, எல்லோருக்கும் பயம் வருவது இயற்கை. அதுபோல, இருண்ட மனதைப் போக்கினால் தான் இன்பம் சூழும். இதற்கு என்ன வழி?

மக்கள் சேவைக்குள் புகுந்துவிடுக. உண்மையான மக்கள் சேவையே, மகேசன் சேவை என்பதை உணர்வீர்கள். இதயத்தில் நிம்மதி ஒளிவிடும். தன்னை மறந்து, புது உலகில்த் தவழ, இந்த வழியையே, புத்திசாலிகள் விருப்பத்துடன் செய்கின்றார்கள்.

உங்கள் உடல் வலுவுக்கு ஏற்ப, விரும்பும் நற்செயலுடன் இணைக. சிறிது நேரமாவது செய்யும் நற்காரியங்கள், விஸ்வரூபமாக மாறும், செய் கருமங்களும் பெருகும்.

உங்களை நோக்குபவர்கள், உங்களுடன் தொடர்ந்து பயணிப்பார்கள். செய்து பாருங்கள்! அதன் புதுமையும் அற்புதங்களும் நன்கு புரியும்.

எங்களால் யாராவது, நல்ல பயனைக் கண்டால், அதைவிடத் திருப்தி ஏது? சமானிய மனிதன், மகா மனிதனாக மாறியது, இதுபோல என்பதை அறிவீர்களா?

வாழும் வழியைச் சுலபமாக்குங்கள். நிம்மதியுடனும் மகிழ்ச்சியுடனும் வாழும் வழியைத் தேர்ந்தெடுங்கள். நல்லதைச் செய்ய ஏது சுணக்கம்? உடன் எழுக.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### மேம்பாலமாக மாற்றுங்கள்

கிளிநொச்சி-அக்கராயன் தாழ்பாலம் மேம்பாலமாக மாற்றப்படாது இருப்பதன் காரணமாகப் பிரதேச மக்கள் மழைக் காலத்தில் பெரும் நெருக்கடியினை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

அக்கராயன் குளத்தின் 600 அடி நீளமான வான் பகுதி வழியாக வெளியேறும் வான் வெள்ளம் திருமுறிகண்டி அக்கராயன் வீதியில் உள்ள 25 அடி நீளமான வான் வழியாக வெள்ளம் வெளியேற முடியாமல் 250 மீற்றர் வரை வீதியினை மூடி வெள்ளம் பாய்வதன் காரணமாக அக்கராயன் பிரதேச வைத்தியசாலையின் நோயாளர் வண்டி உட்பட அனைத்து வாகனங்களும் மாற்று வழிகளைப் பயன்படுத்த வேண்டிய நிலைமை ஏற்படும்.

எனவே பாலத்தினை மேம்பாலமாக மாற்றுங்கள் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– நடராசா கிருஸ்ணகுமார்



# கோணமலை கொடுத்த தமிழ்க்கோன்



சயனிகா சிறிகாந்த்
யாழ். பல்கலைக்கழக ஊடகத்துறை மாணவி
திருகோணமலை

ஒருவரின் நல்ல பக்கங்களை மட்டும் நினைவு கூற செய்வது இறப்பின் சிறப்பு. விமர்சனங்களுக்கு அப்பால் ஈடு செய்ய முடியாத பெரும் வெற்றிடத்தை நிரந்தரமாகி சென்றிருக்கிறார் ஐயா.....
வாதப் பிரதிவாதங்களை தாண்டி தமிழர் பரப்பிலே அதியுச்ச அங்கீகாரத்தையும் அவமதிப்பையும் ஒரு சேரப்பெற்ற ஒரே தலைமை! தவிர்க்க முடியாத ஆளுமை அந்த நாமம் - இரா சம்பந்தன். இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எம்.பியமான இரா சம்பந்தன் ஐயா உடல் நலக்குறைவு காரணமாக 30. 6 2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.
அவருக்கு வயது 91. வயது மூப்பு காரணமாக ஐயா, சில நாட்களாக உடல்நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த போதிலும் அவரது உடல்நிலை மேலும் மோசமடைந்தது. இதனால் கொழும்பு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த இவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.
அவரது மறைவிற்குக் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் உள்ளிட்ட அரசியல் கட்சித் தலைவர்கள் தங்களது இரங்கலைத் தெரிவித்து வருகின்றனர் . மற்றும் பல்வேறு தரப்பினரும் இரங்கலைத் தெரிவித்து வருகின்றனர்.
இராஜவரோதயம் சம்பந்தன் (Rajavarothayam Sampanthan- பிறப்பு - 5 பெப்ரவரி 1933). இலங்கைத் தமிழ் அரசியல்வாதியும், இலங்கை பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவரும், இலங்கைத் தமிழரசுக் கட்சி முன்னாள் தலைவரும் ஆவார்.
1977ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் திருகோணமலைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினரானார்.
1983ஆம் ஆண்டு நடுப்பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பாராளுமன்றத்தைப் புறக்கணித்தனர். இலங்கை அரசியலமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்தின் படி, தனி நாடு கோருவதற்கு ஆதரவளிக்க முடியாது என பாராளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் எடுக்க மறுத்தமைக்காகவும், 1983 கறுப்பு ஜூலை நிகழ்வுகளில் மூவாயிரத்திற்கும் அதிகமான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கும், அவர்களது உடைமைகள் சேதமாக்கப்பட்டதற்கும் எதிர்ப்புத் தெரிவித்தும் அவர்கள் பாராளுமன்ற அமர்வுகளைப் புறக்கணித்தனர். மூன்று மாதங்கள் தொடர்ந்து பாராளுமன்ற அமர்வுகளில் பங்குபற்றாமல் போனதால் சம்பந்தன் அவர்கள் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை 1983, செப்டெம்பர் 7இல் இழந்தார்.
அதன் பிறகு 2001ஆம் ஆண்டில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, டெலோ ஆகிய கட்சிகள் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (ததேகூ) என்ற புதிய கூட்டணிக் கட்சி ஒன்றை ஆரம்பித்தனர். இக்கூட்டணிக்குச் சம்பந்தன் தலைமைப் பொறுப்பை ஏற்றார். அக்கட்சி தேர்தல் சட்டத்தில் அங்கீகரிக்கப்படாத படியால் கூட்டமைப்பு தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெயரில் 2001ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டது. சம்பந்தன் திருகோணமலைத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதன் காரணமாக 18 ஆண்டுகளின் பின்னர் சம்பந்தன் பாராளுமன்றத்திற்கு மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமைக்கப்பட்ட சிறிது காலத்தில் விடுதலைப் புலிகளை இலங்கைத் தமிழரின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு சார்பாகத் தனது நிலைப்பாட்டினை முன்னெடுத்தது. இந்நிலைப்பாட்டுக்கு தவிகூ தலைவர் வி.ஆனந்தசங்கரி எதிர்ப்புத் தெரிவித்து கூட்டமைப்பில் இருந்து விலகினார். அத்துடன், 2004ஆம் ஆண்டு தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெயருடன் போட்டியிடுவதற்கு ஆனந்தசங்கரி அனுமதிக்கவில்லை. இதனால் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டனர். சம்பந்தன் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
2015 தேர்தலில் முக்கிய கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி (ஐதேக), ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி (ஐமசுகூ) ஆகியன முறையே 106, 95 இடங்களைக் கைப்பற்றியிருந்தன. ஐதேக ஆட்சியமைப்பதற்குத் தேவையான அறுதிப் பெரும்பான்மை கிடைக்காததால், இரண்டு முக்கிய கட்சிகளும் இணைந்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைத்தன.
இதனால் 16 இடங்களைக் கைப்பற்றி மூன்றாவது இடத்திலிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் 2015 செப்டெம்பர் 3ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
இலங்கைத் தமிழரசுக் கட்சி (Illankai Tamil Arasu Kachchi- ITAK, முன்னாள் சமஷ்டிக் கட்சி, Federal Party) இலங்கைத் தமிழரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை அரசியற் கட்சியாகும். இக்கட்சி 1949ஆம் ஆண்டில் இலங்கைத் தமிழ்க் காங்கிரசுக் கட்சியில் இருந்து பிரிந்த எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தலைமையில் உருவாக்கப்பட்டது.
1972ஆம் ஆண்டில் இக்கட்சி தமிழ்க் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் இணைந்து தமிழர் ஐக்கிய முன்னணி என்ற பெயரில் கூட்டணி அமைத்தது. பின்னர் இக்கூட்டணியின் பெயர் தமிழர் விடுதலைக் கூட்டணி என மாற்றப்பட்டது.
2004ஆம் ஆண்டில் கூட்டணியில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் அப்போதைய தலைவராக இருந்த வீ.ஆனந்தசங்கரி பிரிந்து சென்றதை அடுத்து இலங்கைத் தமிழரசுக் கட்சி மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. தற்போது இக்கட்சி இலங்கையின் வட, கிழக்கு மாகாணங்களில் பலமான ஓர் அரசியல் கட்சியாக விளங்கி வருகிறது. இக்கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கூட்டமைப்பின் முக்கிய உறுப்புக் கட்சியாகவும் தற்போது உள்ளது.

**2015ஆம் ஆண்டு செப்டெம்பர் 3ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவராக இரா.சம்பந்தன் தேர்ந்தெடுக்கப் பட்டார்**

*******

**இதுவரை அனுபவித்ததை காட்டிலும், தமிழர் தரப்பும் குறிப்பாக திருகோணமலை சமூகமும் விரைவில் உணர்ந்தே தீரும்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (Tamil National Alliance- TNA) என்பது இலங்கையின் தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டணியாகும். இது இலங்கைத் தமிழ் சிறுபான்மையின மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இக்கூட்டணி மிதவாதத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் முன்னாள் போராளி இயக்கங்கள் சிலவும் இணைந்து 2001 அக்டோபரில் அமைக்கப்பட்டது. இந்த கூட்டணி ஆரம்பத்தில் இலங்கைத் தீவின் தமிழர்களுக்குத் தமிழீழம் என்ற ஒரு தன்னாட்சி மாநிலத்தில் சுயநிர்ணயத்தை ஆதரித்தது. இலங்கையில் உள்நாட்டுப் போரைத் தீர்க்க ஆயுதப் போரில் ஈடுபட்ட விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை அது ஆதரித்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப் புலிகளின் அரசியல் பிரதிநிதிகளாகப் பெரும்பான்மையினரின் மத்தியில் கருதப்பட்டாலும், அதன் தலைமை ஒருபோதும் தாம் புலிகளை ஆதரிக்கவில்லை எனவும், அரசாங்கத்தைப் போலவே புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் தெரிவித்து வந்தது.
2009இல் உள்நாட்டுப் போர் முடிவடைந்து, விடுதலைப் புலிகள் போரில் தோல்வியடைந்ததை அடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனியரசுக்கான கோரிக்கையைக் கைவிட்டு, பிராந்திய சுயாட்சியை ஏற்கத் தயாராக இருப்பதாக அறிவித்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தற்போது இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், தமிழீழ விடுதலை இயக்கம் ஆகிய மூன்று கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. இலங்கை பாராளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போது 10 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அத்துடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 33 உள்ளூராட்சி சபைகளையும் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. கூட்டமைப்பின் தலைவராக இரா.சம்பந்தன் உள்ளார். இவர் செப்டெம்பர் 2015 முதல் 2018 டிசெம்பர் வரை எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்துள்ளார். பின்னர் 2020இல் மீண்டும் பாராளுமன்றத்திற்கு அவர் தெரிவானார்.
இதேவேளை, கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னதாக சம்பந்தன் ஐயாவுக்கு மூன்று மாத கால விடுமுறை வழங்கப் பாராளுமன்றத்தில் முன்மொழியப்பட்டது. சுகவீனமடைந்து உள்ளமையினால் அவருக்கு விடுமுறை வழங்குமாறு எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல கோரிக்கை விடுத்த நிலையில், அதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது.
இந்த நிலையிலேயே உடல் நலக் குறைவு காரணமாக அண்மைய நாட்களாகக் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த அவர், ஞாயிற்றுக்கிழமை (30.6.2024) காலமானார். ஐயாவின் பூதவுடல் அஞ்சலிக்காகக் கொழும்பில் மலர்சாலையில் வைக்கப்பட்டு, அதன் பின்னர் பாராளுமன்றத்தில் வைக்கப்படவுள்ளது.
மற்றும் ஐயாவின் பூதவுடல் இறுதி கிரியைகளுக்காக அவரின் சொந்த ஊரான திருகோணமலைக்குக் கொண்டு செல்லப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.
ஒன்றிணைந்த, பிரிக்கப்படாத, பிரிக்க முடியாத நாட்டுக்குள் தமிழர்களுக்கான சம உரிமைகளைக் கோரி தொடர்ந்தும் பாராளுமன்றில் குரல் கொடுத்து வந்திருந்த அவர், தமிழர் அரசியலில் தவிர்க்க முடியாத ஒரு தலைவராவார். இந்த தலைமைத்துவ வறட்சியின் பிரதிபலனை இன்னும் தீவிரமாக இதுவரை அனுபவித்ததை காட்டிலும், தமிழர் தரப்பும் குறிப்பாக திருகோணமலை சமூகமும் விரைவில் உணர்ந்தே தீரும்.





ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின்

# 27ஆது வருடாந்த மாநாடு

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 27ஆவது வருடாந்த மாநாடு கொழும்பு தபால் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் போரத்தின் தலைவர் என்.எம்.அமீன் தலைமையில் ஜூன் 30ஆம் திகதியன்று நடைபெற்றது.
போரத்தின் தலைவராக என்.எம்.அமீன் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். பொதுச் செயலாளராக சாதிக் சிஹான், பொருளாளராக கியாஸ் ஏ புகாரி தெரிவு செய்யப்பட்டனர்.
24-25ஆம் ஆண்டுக்கான நிர்வாகக் குழு உறுப்பினர்கள் 15 பேர் வாக்களிப்பின் ஊடாக தெரிவு செய்யப்பட்டனர்.
சிஹார் அனீஸ், அஷ்ரப் ஏ சமத், இர்சாத் ஏ காதர், சம்ஸ் பாகிம், எம்.ஏ எம். நிலாம். றிப்தி அலி, எம்.எப் றிபாஸ், அஸ்கர் ஆதம் றம்சி குத்தூஸ், சமீஹா சபீர், அத்தீபா தவ்சீர், யாழ். பரீட் இக்பால், எஸ்.எம்.எம்.முஸ்தபா மௌலவி, ஜாவித் முனவ்ர், எம்.ஜ. நிசாமுடீன் ஆகியோர் நிர்வாகக் குழு உறுப்பினர்களாவர்.

■ அஷ்ரப் ஏ.சமத்



























## யார் ஆட்சிக்கு வந்தாலும்

# “பின்னோக்கிச் செல்ல முடியாது”

இந்த நற்செய்தியை எதிர்காலத்தில் முன்னெடுத்துச் செல்லும் வகையில், அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த வேலைத்திட்டத்தை வெற்றிபெறச் செய்து நாட்டைக் கட்டியெழுப்பும் சவாலான செயற்பாட்டில் கட்சி, நிற பேதம் இன்றி இணைந்து கொள்ளுமாறு பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைவருக்கும் ஜனாதிபதி மீண்டும் அழைப்பு விடுத்தார்.

கடந்த இரண்டு வருடங்களாகத் தாம் அரசியலில் ஈடுபடவில்லை என தெரிவித்த ஜனாதிபதி, தாம் எப்பொழுதும் நாட்டுக்காகவே தீர்மானங்களை எடுத்து வருவதாகவும், அரசியல் அதிகாரத்திற்காகவோ அல்லது பிரபல்யத்திற்காகவோ முடிவுகள் எடுப்பதில்லை எனவும் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆற்றிய உரை,

பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான சவாலான பயணம் தொடங்கிய நாள் முதல், நான் அவ்வப்போது பாராளுமன்றத்தில் அது தொடர்பிலான விடயங்களை முன்வைத்தேன். முதலில் நாங்கள் பின்பற்றி வரும் திட்டங்களைப் பாராளுமன்றத்தில் விளக்கினோம். அதன் பிறகு நாங்கள் செய்த முன்னேற்றம் குறித்து விளக்கினோம்.

2022இல் கடன் செலுத்த முடியாத நாட்டிற்கு, மீண்டும் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் சவாலான பயணத்தில் இன்னுமொரு முக்கியமான மைல்கல்லை எட்டுவதற்கு எம்மால் முடிந்தது.

கடந்த ஜூன் 26ஆம் திகதி எது உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுடன் மீண்டும் கடனைச் செலுத்துவதற்கான இணக்கப்பாட்டை எட்டுவதற்கு முடிந்தது.

அமைச்சரவையினால் அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரிகள், எமது நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தி இந்த இணக்கப்பாடுகளிலும், ஒப்பந்தங்களிலும் கையெழுத்திட்டனர்.அன்றிரவு இலத்திரனியல் ஊடகங்களின் ஊடாக நாட்டு மக்களுக்கு இதுகுறித்து அறிவித்தேன்.

பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பும் சவால் மிக்க பயணத்தின் ஆரம்ப நாள் முதல் நான் இதுகுறித்து அவ்வப்போது பாராளுமன்றத்தில் தகவல்களை முன்வைத்தேன்.முதலில் நாம் பின்பற்றும் திட்டங்கள் குறித்து பாராளுமன்றத்தைத் தெளிவுபடுத்தினோம். அதன்பின்னர் நாம் பெற்றுக்கொண்ட முன்னேற்றங்கள் குறித்து தகவல்களை முன்வைத்தோம்.

இதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் சவாலை நான் ஏற்றுக்கொண்ட பின்னர், எமது நான்கு அம்சக் கொள்கைகளை நான் பாராளுமன்றத்தில் முன்வைத்தேன்.

1. சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்தாலோசித்து, விரிவான கடன் வசதிகளைப் பெற்று நாட்டில் நிதி ஒழுக்கத்தை ஏற்படுத்துவது,

2. சர்வதேச நிதி மற்றும் சட்ட வல்லுநர்களான லாஸார்ட் மற்றும் கிளிபோர்ட் சான்ஸ் நிறுவனங்களுடன் இணைந்து கடன் உறுதிப்படுத்தல் திட்டத்தைத் தயாரித்து கடன் வழங்குநர்களுடன் உடன்பாட்டை எட்டுவது,

3. வெளிநாட்டு முதலீட்டை உறுதிப்படுத்திக் கொள்வதோடு, ஏற்றுமதிப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் கொள்கைகள், சட்ட திட்டங்களை உருவாக்குவதுடன், டிஜிட்டல் பசுமைப் பொருளாதாரத்தை உருவாக்குவது,

4. இத்திட்டத்தின் மூலம் 2048 ஆம் ஆண்டுக்குள் கடனற்ற பொருளாதாரத்தை உருவாக்கி அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவது,

அதிலிருந்து நாம் கடினமான, கஷ்டமான பயணத்தை ஆரம்பித்தோம். அந்தப் பயணமே எதிர்கால வெற்றிக்கு வழிவகுக்கும் என்பதை நாம் அறிந்திருந்தோம். படிப்படியாக நாம் முன்னேறிச் சென்றோம். 2023 - 2024 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அந்த வேலைத் திட்டத்தை மேலும் வலுப்படுத்தினோம்.

2023 மார்ச் மாதத்தில் ஐ.எம்.எப். நீடிக்கப்பட்ட கடன் வசதியைப் பெற்றுக் கொள்வதற்கான இணக்கப்பாடுகளை எட்டினோம். அதன் முதல் தவணையை 2023ஆம் ஆண்டு மார்ச் 20ஆம் திகதி பெற்றுக்கொண்டோம். நாம் அடைந்திருந்த முன்னேற்றத்தை மீளாய்வு செய்த பின்னர், இரண்டாம் தவணையை 2023இல் டிசம்பர் 12ஆம் திகதியும், மூன்றாம் தவணையை 2024 ஜூன் 12ஆம் திகதியும் பெற்றுக்கொண்டோம்.

ஐ.எம்.எப். வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல், கடன் மறுசீரமைப்பிற்கான பேச்சுவார்த்தைகளை நாம் ஆரம்பித்தோம். இந்தப் பணிகளுக்குத் தேவையான நிபுணத்துவ அறிவைப் பெற்றுக்கொள்வதற்காக லஸார்ட் (Lazard) மற்றும் கிளிபோர்ட் சான்ஸ் (Clifford Chance) சர்வதேச நிறுவனங்களின் ஒத்துழைப்பைத் தொடர்ந்து பெற்றோம்.

எமது வெளிநாட்டுக் கடன் 37 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இதில் 10.6 பில்லியன் டொலர் இரு தரப்பு கடன், 11.7 பில்லியன் டொலர்கள் பல்தரப்பு கடன்,14.7 பில்லியன் டொலர் வணிகக் கடன்,12.5 பில்லியன் டொலர் கடன் பிணை முறிகள் மூலம் பெறப்பட்டவை. கடனை வெட்டிவிடுதல், கடன் சலுகை காலம், கடனை மீளச் செலுத்தும் கால அவகாசத்தை நீடித்தல் உள்ளடங்கலான கடன் மறுசீரமைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பாகப் பாராளுமன்றத்திலும், வெளியிலும் பல தரப்பினர், பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இவற்றில் சில விடயங்கள் உண்மைக்குப் புறம்பானவை. சில விடயங்களில் பாதி உண்மையே இருந்தது. அதனால் கடன் மறுசீரமைப்பு குறித்த விடயங்களில் சர்வதேச நடைமுறைகளையும், உண்மைகளையும் நான் இந்தத் தருணத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.



வெளிநாட்டுக் கடன்கள் என்றால் என்ன? வெளிநாடுகள் கடன்களை வழங்க எங்கிருந்து பணத்தைப் பெறப்படுகின்றன? அந்தந்த நாட்டு மக்களின் வரிப் பணத்தையும், சேமிப்புக்களையுமே எமது கடனாக வழங்குகின்றனர். ஆனால், எமது நாட்டில் எந்தவொரு அர்ப்பணிப்பையும் செய்யாமல் கடன் சலுகைகளைப் பெற வேண்டும் என்று யோசனை முன்வைக்கின்றனர். அவ்வாறு நடக்காது. இது நடைமுறைச் சாத்தியமற்றது. சர்வதேச நடைமுறைகளுக்கமைய அவ்வாறு செய்ய முடியாது. மக்களின் வரிப் பணத்தைப் போலவே, அவர்களின் சேமிப்புக்கள் குறித்து தீர்மானங்களை எடுக்கும்போது, எங்களுக்கும் சில அர்ப்பணிப்புக்களைச் செய்ய நேரிடும். நாம் இதற்காக அர்ப்பணிப்புச் செய்யாவிட்டால், அந்நாட்டு மக்கள் எங்களுக்காக அர்ப்பணிப்புச் செய்ய முன்வர மாட்டார்கள்.

அதுமட்டுமன்றி, கடன் மறுசீரமைப்பு என்பது மிகக் கடினமான பணி. இந்தப் பணி கடினமானது மற்றும் வேதனையானது என்று சர்வதேச பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர். கடன் வழங்குநர்களுக்கும், கடனாளிகளுக்கும், நாட்டு மக்களுக்கும், மத்தியஸ்தர்களுக்கும், இந்தப் பணி கடினமானது. உத்தியோகபூர்வ இரு தரப்பு கடன் வழங்குநர்கள், அடிப்படை கடன் தொகையைக் குறைக்கமாட்டார்கள். எமக்கு சலுகைகளை மட்டுமே பெற முடியும். கடன் செலுத்தும் காலத்தை நீடித்துக் கொள்வது, கடன் சலுகைக் காலம், வட்டி வீதத்தைக் குறைப்பது ஆகிய விடயங்களில் சலுகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

எனினும், இந்த யதார்த்தைப் புரிந்துகொள்ளாமல், சிலர் அடிப்படை கடன் தொகையைக் குறைப்பது குறித்து இலங்கை அரசாங்கம் கோரிக்கை முன்வைக்கவில்லை என்று குற்றஞ்சாட்டுகின்றனர். இன்னும் சிலர் தாம் அதிகாரத்திற்கு வந்த பின்னர் அடிப்படைக் கடன் தொகையில் 50 வீதத்தைக் குறைத்துக் கொள்வதற்குக் கடன் வழங்கியுள்ள நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாகக் கூறுகின்றனர். இவ்வாறான பணியைச் செய்வதற்கு இரு தரப்பினரும் இணக்கம் காண்பது அவசியம் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நாம் சொல்வதை மட்டும் கடன் வழங்குநர்கள் செய்யமாட்டார்கள் என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். சர்வதேச பொருளாதார வழிமுறைகள் குறித்து இவர்களுக்கு எந்தப் புரிதலும் இல்லை என்பதே இவ்வாறான கருத்துக்களின் மூலம் தெரிகிறது.

கடன் மறுசீரமைப்பை எவ்வாறு முன்னெடுப்பது என்பது குறித்த இறுதித் தீர்மானத்தை எடுக்கும் அதிகாரம் கடன் வழங்குநருக்கோ, கடன் பெறுநருக்கோ இல்லை. இதுகுறித்த தீர்மானத்தை ஐ.எம்.எப் நிறுவனமே எடுக்கும். நாட்டில் கடன் ஸ்திரத் தன்மையை ஏற்படுத்துவதற்குத் தேவையான மறுசீரமைப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும் அந்த நிறுவனமே தீர்மானிக்கும். அந்தந்த நாடுகளின் பொருளாதார பலம் குறித்து சுயாதீன மதிப்பீட்டின் பின்னர் அந்தத் தீர்மானத்தை எடுப்பார்கள்.

எமது நாட்டில் கடன் ஸ்திரத் தன்மை இல்லை என்று ஐ.எம்.எப். நிறுவனம் 2022இல் நாம் கஷ்டத்தில் விழுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்னரே எங்களுக்கு அறிவித்திருந்தது. அதேபோல் ஐ.எம்.எப். நிறுவனம் பின்பற்றும் நடைமுறை நாட்டிற்கு நாடு வேறுபடுகிறது. குறைந்த வருமானம் பெறும் நாடு தொடர்பில் ஒரு நடைமுறையைப் பின்பற்றுகின்றனர். நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் தொடர்பில் வேறொரு நடைமுறை பின்பற்றப்படுகிறது. இதுகுறித்து ஒரு உதாரணத்தை முன்வைக்கிறேன்.

இலங்கை நடுத்தர வருமானம் பெறும் நாடுகளின் பட்டியலில் வருகிறது. நடுத்தர வருமானம் பெறும் நாடுகளுக்காக அறிமுகப்படுத்தியுள்ள புதிய கடன் ஸ்திரத்தன்மை விசேட வரையறைகளைப் பயன்படுத்தி கடன் மறுசீரமைப்புக்களை மேற்கொண்ட நடுத்தர வருமானம் பெறும் நாடுகளில் இலங்கையும் ஒன்று.

இலங்கைக்காக அவர்கள் முன்வைத்த செயல்திட்டத்திற்கமைய 2032 அரச கடன் தொகை, மொத்த தேசிய உற்பத்தியில் 95 வீதத்தையும்விட குறைத்திட வேண்டும். குறைந்த வருமானம் பெறும் நாடான கானாவிற்கு இதற்கு மாறான வேலைத் திட்டத்தையே முன்வைத்திருந்தனர்.

இந்த வேலைத் திட்டத்திற்கமைய 2028இல் அவர்களின் அரச கடனானது மொத்த தேசிய உற்பத்தியில் 55 வீதத்தைவிடக் குறைவானதாக இருக்க வேண்டும். கானாவும் இலங்கையைப் போன்று இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. அந்நாட்டு ஜனாதிபதியும் நானும் இதுகுறித்து அடிக்கடி பேசிவந்துள்ளோம். ஆனால் கானா என்பது குறைந்த வருமானம் பெறும் நாடாகும். எனினும், எமது இரு நாடுகளுக்கும் பொதுவான சில விடயங்களும் இருந்தன. சில விடயங்கள் மாறுபட்டிருந்தன. ஆனால் இரு நாடுகளுக்கும் இந்த வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல முடிந்துள்ளது.

இந்தப் பின்னணியில், உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவின் உறுப்பினர்கள் என்ற வகையில் பெரிஸ் கழகம், இந்தியா மற்றும் சீனா எக்ஸிம் வங்கியுடனும் தனித்தனியாகப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியிருந்தது. எனினும், இதில் எந்தவொரு தரப்பினருக்கும் சிறப்பிடம் கொடுப்பதற்கு எமக்கு அனுமதியிருக்கவில்லை. இந்த இரு தரப்பினரையும் சமமாக நடத்தும் பொது நிபந்தனைகளைத் தயாரிப்பதே எமக்கிருந்து பாரிய சவாலாகும்.

தற்போது நாம் எதிர்கொண்டுள்ள பூகோள அரசியல் முன்னேற்றங்களுக்கு மத்தியிலேயே நாம் இந்த இந்த சிக்கலான சவாலை சந்தித்தோம். இதனால் எமது இலக்குகளை நோக்கிப் பயணிப்பது இலகுவானதாக அமையவில்லை. பொம்மலாட்டத்தையும் முகக் கவச நடனத்தையும் ஒன்றாக ஆடுவதைப் போல இது மிகவும் சிக்கலான பணியாக இருந்தது. இது செய்ய முடியாத பணியாகும். இருந்தாலும் நாம் செய்து முடித்தோம். எனினும், இந்த அனைத்து கஷ்டங்களுக்கும் சவால்களுக்கும் மத்தியில் ஐ.எம்.எப். வேலைத் திட்டத்தை ஆரம்பித்து 15 மாதங்கள் என்ற குறுகிய காலத்திற்குள் வெளிநாட்டு இரு தரப்பு உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுடன் இணக்கப்பாட்டிற்கு வர முடிந்தது.

இந்த குறுகிய காலத்திற்குள் கடன் மறுசீரமைப்புப் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுத்த நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் பட்டியலில் நாம் முன்னணி வகிக்கிறோம். இது மிகப் பெரிய வெற்றியாகும். இது நற்செய்தியாகும்.

இந்தியா, ஜப்பான், பிரான்ஸ், இணைத் தலைமைத்துவம் வகிக்கும் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழு மற்றும் சீன எக்ஸிம் வங்கி ஆகிய தரப்புக்களுடன் கடன் மறுசீரமைப்பு குறித்து எட்டப்பட்ட இணக்கப்பாடுகள் குறித்து நான் பாராளுமன்றத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அடிப்படை கடனை மீளச் செலுத்துவதற்காக 2028 வரை கால அவகாசம் எங்களுக்குக் கிடைத்துள்ளது. வட்டி வீதம் குறிப்பிடத்தக்களவு குறைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய வட்டி வீதம் 2.1 அல்லது அதற்குக் குறைந்தளவில் தக்கவைத்துக் கொள்ள அனுமதி கிடைக்கும். கடனை முழுமையாகச் செலுத்தி முடிக்க 8 வருட கால அவகாசம் கிடைத்துள்ளது. இன்னுமொரு வகையில் கூறுவதாயின், 2043ஆம் ஆண்டு வரை அவகாசம் கிடைத்துள்ளது என்றார்.





## அரசியல் சகாக்கள் அஞ்சலி....

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம்பந்தனின் பூதவுடல், மக்கள் அஞ்சலிக்காக பொரளை ஏ.எப்.ரேமன்ட் மலர்ச்சாலையில் செவ்வாய்க்கிழமை (02) வைக்கப்பட்டிருந்தது. அங்கு அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட பலரும் சென்று தங்களுடைய அஞ்சலியைச் செலுத்தினர்.














பிரேசிலியா

நடுவானில் குலுங்கிய விமானத்தால்

# 40 பயணிகள் காயம்





ஸ்பெயினிலிருந்து தென் அமெரிக்க நாடான உருகுவேவுக்கு சென்ற எயார் யூரோப்பா விமானம் நடுவானில் குலுங்கிய காரணத்தால் 40 பயணிகள் காயமடைந்தனர். இதனால், அவசர நிலையை கருத்தில் கொண்டு அந்த விமானம் பிரேசில் நாட்டில் தரையிறக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை அன்று இந்தச் சம்பவம் நடந்துள்ளது. மேலும், விமானம் வானில் குலுங்கிய போது அருகாமையில் இருந்த விமான நிலையத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், காயமடைந்த பயணிகளில் 30 பேருக்கு விமான நிலையத்தில் வேண்டிய மருத்துவ உதவி வழங்கப்பட்ட நிலையில், 10 பேர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

ஸ்பெயினின் மாட்ரிட் நகரில் இருந்து புறப்பட்ட இந்த விமானத்தில் 325 பேர் பயணித்துள்ளனர். இந்நிலையில், பயணிகள் மாற்று விமானம் மூலம் உருகுவே செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என ஏர் யூரோப்பா விமான நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேபோல, கடந்த மே மாதம் சிங்கப்பூர் எயார்லைன்ஸ் நிறுவனம் ஒன்றும் நடுவானில் குலுங்கியது. அதில் பயணித்த பயணி ஒருவர் உயிரிழந்த நிலையில், பலர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



டெல் அவிவ்

இஸ்ரேல் சிறைகளில் சித்திரவதை அனுபவிக்கும்

## பலஸ்தீன கைதிகள்

பலஸ்தீன கைதிகள் இஸ்ரேல் சிறைகளில் சித்திரவதை செய்யப்படுவதாக அல்-ஷிஃபா மருத்துவமனையின் இயக்குநர் டொக்டர் முஹம்மது அபு சல்மியா தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு அக்டோபர் 7 முதல் காசா மீதான இஸ்ரேலின் போரில் 37,900 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 80,060 பேர் காயமடைந்துள்ளதுடன், பலர் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், டொக்டர் முஹம்மது அபு சல்மியா இஸ்ரேலிய சிறையில் இருந்த தனது அனுபவத்தை பகிர்ந்துள்ளார். அதில், 'பல கைதிகள் விசாரணை அறைகளில் கொல்லப்பட்டனர். இஸ்ரேலிய மருத்துவர்களும், செவிலியர்களும் பலஸ்தீன கைதிகளை அடித்து சித்திரவதை செய்கின்றனர் மற்றும் கைதிகளின் உடல்களை உயிரற்ற பொருட்களைப் போல நடத்துகிறார்கள்.

உணவு மறுக்கப்பட்ட காரணத்தால், ஒவ்வொரு கைதியும் சுமார் 30 கிலோ எடையை இழந்துள்ளனர் என்றார்.

அமெரிக்கா

பாராட்டாத கணவருக்கு

## சோடாவில் விஷத்தை கலந்து கொடுத்த மனைவி



அமெரிக்காவில் கணவனைக் கொலை செய்ய நினைத்த பெண், தனது கணவர் குடிக்கும் சோடாவில் விஷத்தைக் கலந்து வைத்துள்ளார். அதைக் குடித்த கணவர் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளார். அமெரிக்காவைச் சேர்ந்தவர் மிச்செல் வை பீட்டர்ஸ். இவர் தனது கணவரின் ஐம்பதாவது பிறந்தநாளைக் கொண்டாடுவதற்காக ஏற்பாடுகள் செய்திருந்த நிலையில், அதைப்பற்றி அவரது கணவர் பாராட்டு தெரிவிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இதனால் ஆத்திரம் கொண்ட மிச்செல், தனது கணவர் குடிக்கும் சோடாவில் விஷத்தைக் கலந்து குளிர்சாதனப் பெட்டியில் வைத்துள்ளார். பிறந்தநாள் அன்று கணவர் குளிர்சாதனப் பெட்டியிலிருந்து மனைவி கலந்து வைத்த சோடாவை எடுத்துக் குடித்துள்ளார். அதன் சுவையானது வழக்கத்திற்கு மாறாக இருந்துள்ளது. இருப்பினும் அதைக் குடித்தவருக்கு வயிற்று வலி, வாந்தி ஏற்பட்டுள்ள நிலையில், சில தினங்களில் அவருக்கு தொண்டைப் புண், வயிற்றுப் போக்கும் ஏற்பட்டுள்ளது.

சந்தேகமடைந்த கணவன், சம்பவ தினத்தின் சிசிரிவி காட்சியை எடுத்துப் பார்த்துள்ளார். அவர் நினைத்ததுபோல, தனது மனைவி, குளிர்சாதனப் பெட்டியிலிருந்து ஒரு பூச்சிக்கொல்லி மருந்தையும், சோடா போத்தலையும் எடுத்துச் சென்றதும், பிறகு மீண்டும் அவற்றை அதே இடத்தில் கொண்டு வைத்ததும் தெரிந்தது. இதையடுத்து கணவர் தனது மனைவியைப் பற்றி பொலிஸில் புகாரளித்துள்ளார்.

கவுகாத்தி

தொடர் மழை, வெள்ளப்பெருக்கால்

## 6.5 இலட்சம் மக்கள் பாதிப்பு



அசாம் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக, சுமார் 6.5 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இதுவரை 40க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த சில தினங்களாக, வடகிழக்கு மாநிலமான அசாமில் கனமழை கொட்டி தீர்த்து வருகிறது. இடைவிடாத மழை பெய்து வருவதால், ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. தேசிய பேரிடர் மீட்புப்படை, மாநில பேரிடர் மீட்புப்படை மற்றும் மாவட்ட நிர்வாகத்தினர் இணைந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், 6.5 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்திய விமானப்படை இதுவரை வெள்ளத்தில் சிக்கிய, 13 பேரை மீட்டுள்ளது. பிரம்மபுத்திரா மற்றும் அதன் துணை நதிகள் உள்ளிட்ட முக்கிய ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

மேலும், திப்ருகர் உள்ளிட்ட 19 மாவட்டங்களில் வெள்ளம் சூழ்ந்த பகுதியில் சிக்கித் தவித்த மக்களை மீட்புப் படையினர் மீட்டனர்.

சென்னை

செங்கோலை விமர்சித்த

## தமிழக எம்.பியால் சர்ச்சை

மறைந்த திமுக தலைவர் கருணாநிதி, செங்கோலைப் பெருமைப்படுத்தி எழுதியிருந்த நிலையில், திமுக கூட்டணியில் இடம்பெற்று, மதுரை தொகுதியில் வென்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் எம்.பி. சு.வெங்கடேசன், லோக்சபாவில் கருணாநிதியின் விளக்கத்திற்கு மாறாக செங்கோலை பற்றியும், பெண்களை பற்றியும் இழிவுப்படுத்தி பேசியிருப்பது கூட்டணிக்குள் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

லோக்சபாவில் ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது தமிழகத்தைச் சேர்ந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எம்.பி. சு.வெங்கடேசன் பேசுகையில், 'மன்னராட்சி ஒழிந்தபோதே செங்கோலின் மகிமையும் ஒழிந்து விட்டது. இந்த செங்கோலைக் கையில் வைத்திருந்த ஒவ்வொரு மன்னனும் தனது அந்தப்புரத்தில் எத்தனை நூறு பெண்களை அடிமையாக வைத்திருந்தான் தெரியுமா?

இந்த செங்கோலைக் கொண்டுவந்து இந்த இடத்தில் (லோக்சபாவில்) வைத்ததன் மூலம், இந்த நாட்டுப் பெண்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்? செங்கோல் என்பது மன்னராட்சி குறியீடு மட்டுமின்றி, அறம் மற்றும் நேர்மையின் குறியீடு. பா.ஜ.,வுக்கும் நேர்மைக்கும் என்ன சம்பந்தம்?" எனக் கேள்வி எழுப்பினார்.

இந்நிலையில், சு.வெங்கடேசனின் பேச்சுக்கு, சமூக ஆர்வலர்கள் மத்தியில் கடும் விமர்சனம் எழுந்துள்ளது.

யூரோ:

# பெல்ஜியத்தை வென்று காலிறுதியில் பிரான்ஸ்

## பெனால்டியில் ஸ்லோவேனியாவை வென்று காலிறுதியில் போர்த்துக்கல்




ஜேர்மனியில் நடைபெற்று வரும் ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் யூரோ கிண்ணத் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு பிரான்ஸ் தகுதி பெற்றுள்ளது.

திங்கட்கிழமை (01) நடைபெற்ற பெல்ஜியத்துடனான இறுதி 16 அணிகளுக்கிடையிலான விலகல் முறையிலான சுற்றுப் போட்டியின் இறுதி நேரத்தில் மாற்றுவீரராகக் களமிறங்கிய பிரான்ஸின் ரன்டல் கொலோ முவானியின் உதையானது பெல்ஜியத்தின் ஜான் வெர்டொங்கனில் பட்டு கிடைக்கப் பெற்ற ஓவ்ண் கோல் காரணமாக 1-0 என்ற கோல் கணக்கில் வென்ற பிரான்ஸ் காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இதேவேளை ஸ்லோவேனியாவுடனான போர்த்துக்கல்லின் போட்டியின் வழமையான நேரத்தில் இரண்டு அணிகளும் கோலெதனையும் பெறாமல் போட்டி மேலதிக நேரத்துக்குச் சென்று அதில் கிடைக்கப் பெற்ற பெனால்டியொன்றை போர்த்துக்கல்லின் கிறிஸ்டியானோ ரொனால்டோ உதைய அதை ஸ்லோவேனியாவின் கோல் காப்பாளர் ஜான் ஒப்ளக் தடுக்க போட்டி பெனால்டிக்குச் சென்றது.

பெனால்டியில் ஸ்லோவேனியாவின் முதல் மூன்று உதைகளையும் டியகோ கொஸ்டா தடுத்ததுடன், போர்த்துக்கலின் ரொனால்டோ, ப்ரூனோ பெர்ணாண்டஸ், பெர்னார்டோ சில்வா ஆகியோர் தமதுதைகளை உட்செலுத்திய நிலையில் 3-0 என்ற ரீதியில் பெனால்டியில் வென்ற போர்த்துக்கல் காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.



## இங்கிலாந்தின் வேகப்பந்துவீச்சு ஆலோசக்ராக அன்டர்சன்

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியைத் தொடர்ந்து டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் இங்கிலாந்துடன் வேகப்பந்துவீச்சு ஆலோசகராக ஜேம்ஸ் அன்டர்சன் இணையவுள்ளார்.

எல்.பி.எல்:

## தம்புள்ளையை வீழ்த்திய கண்டி



இலங்கையின் உள்ளூர் இருபதுக்கு-20 தொடரான லங்கா பிறீமியர் லீக்கானது (எல்.பி.எல்) பல்லேகலவில் திங்கட்கிழமை (01) ஆரம்பித்த நிலையில், ஆரம்பப் போட்டியில் தம்புள்ள சிக்ஸர்ஸை நடப்புச் சம்பியன்களான கண்டி பல்கொன்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: கண்டி பல்கொன்ஸ்

தம்புள்ள சிக்ஸர்ஸ்: 179/4 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: மார்க் சப்மன் ஆ.இ 91 (61), சமிந்து விக்ரமசிங்க ஆ.இ 62 (42) ஓட்டங்கள். பந்துவீச்சு: தசுன் ஷானக 3/20 [4], துஷ்மந்த சமீர 0/27 [4], வனிது ஹசரங்க 0/32 [4], கமிந்து மெண்டிஸ் 0/8 [1])

கண்டி பல்கொன்ஸ்: 183/4 (17.2 ஓவ.) (துடுப்பாட்டம்: தினேஷ் சந்திமால் 65 (40), தசுன் ஷானக ஆ.இ 46 (15), அஞ்சலோ மத்தியூஸ் ஆ.இ 37 (20), கமிந்து மெண்டிஸ் 27 (20) ஓட்டங்கள். பந்துவீச்சு: அகில தனஞ்சய 1/29 [4])

போட்டியின் நாயகன்: தசுன் ஷானக

இந்நிலையில், இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ஜஃப்னா கிங்ஸை தம்புள்ள எதிர்கொள்ள வுள்ளதுடன், இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கொழும்பு ஸைஸ்ரக்கர்ஸும், கோல் மார்வெல்ஸும் மோதவுள்ளன.



விளையாட்டுத்துறையில் தேசியரீதியில் பிரகாசிப்பு:

## பாயிஸுக்கு காத்தான்குடி மீடியா போரத்தால் கௌரவம்

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

விளையாட்டுத்துறையில் தேசியரீதியில் சாதனை புரிந்த ஊடகவியலாளர் என்.எம்.எம்.பாயிஸ் காத்தான்குடி மீடியா போரத்தால் காத்தான்குடி அமானுல்லாஹ் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து திங்கட்கிழமை (01) கௌரவிக்கப்பட்டார்.

ஊடகவியலாளர் என்.எம்.எம். பாயிஸ் அண்மையில் இலங்கையில் நடைபெற்ற மாஸ்டர்ஸ் தடகள சம்பியன்ஷிப்பில் 5,000 மீற்றர் வேகநடைப் போட்டியிலும் 3,000 மீற்றர் தடை தாண்டல் போட்டியிலும் பங்குபற்றி இரண்டாமிடத்தினைப் பெற்றிருந்தார்.

சஹீரியன்ஸ்களுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடர்:

## சம்பியனான சீகோன் ரெட்

■ எம்.யூ.எம்.சனூன்



புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் அமைப்பான 'சோன்' அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட 'க்லேஷ் ஒப் சஹீரியன்ஸ் சீசன் 5' கால்பந்தாட்டத் தொடரில் சீகோன் ரெட் (2015 சா/த, 2018 உ/த) அணி சம்பியனானது.

மொத்தமாக 40 பழைய மாணவர் சங்க அணிகள் பங்கேற்ற இத்தொடரின் பாடசாலை மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் 5-0 என்ற கோல் கணக்கில் சஹீரியன்ஸ் 14 அணியை வென்றே சீகோன் ரெட் சம்பியனானது.

இத்தொடரில் சிறந்த கோல் காப்பாளராக பல்ஸ்ட் அணி வீரர் ஜப்ரிஸ் தெரிவானார்.

சம்பியனான சீகோன் ரெட் அணிக்கு 50,000 ரூபாய் ரொக்கப் பணமும், இரண்டாமிடம் பெற்ற சஹீரியன்ஸ் 14 அணிக்கு 30,000 ரூபாய் ரொக்கப் பணமும் வழங்கப்பட்டதோடு வெற்றிக்கிண்ணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 03 ஜூலை 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.